# இந்தியத் துணைத் தூதரகம்

**யாழ்ப்பாணம்**

ஊடக அறிக்கை

வட மாகாணத்தின் கல்வி அபிவிருத்திக்கு என இந்திய அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படும் பல்வேறு வேலைத்திட்டங்களின் ஓர் அங்கமாக இலங்கை ரூபா 250 மில்லியன் செலவில் 27 பாடசாலைகளைத் தெரிவுசெய்து மாணவர்களுக்கான வகுப்பறைக் கட்டடங்களை அமைப்பதற்க்கான பணிகள் இடம்பெற்று வருகின்றன. இத் திட்டத்தின் கீழ் ஏற்கனவே வட மாகாணத்தில் 15 பாடசாலைகளில் வகுப்பறைக் கட்டிடங்கள் அமைக்கப்பட்டு வடமாகாண மக்களுக்காக அர்ப்பணிக்கப்பட்டது.

2. அதன் தொடர்ச்சியாக இன்று (15 ஜனவரி 2020) யாழ்ப்பாணம் கதீஜா முஸ்லிம் மகளிர் வித்தியாலயத்திலும், யாழ் வளலாய் அமரிக்க மிஷன் தமிழ் கலவன் பாடசாலையிலும், யாழ் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியிலும், யாழ் வறுத்தலைவிளான் அமரிக்க மிஷன் தமிழ் கலவன் பாடசாலையிலும், முல்லைத்தீவு விஸ்வநாதர் ஆரம்ப பாடசாலையிலும் ஒவ்வொன்றும் முறையே 12.05 மில்லியன், 6.11 மில்லியன், 14.92 மில்லியன், 8.31 மில்லியன் மற்றும் 14.26 மில்லியன் என மொத்தம் இலங்கை ரூபாய் 55.65மில்லியன் இந்திய அரசாங்கத்தின் நிதிப் பங்களிப்பில் அமைக்கப்பட்ட வகுப்பறை தொகுதிகள் மாண்புமிகு இலங்கைக்கான இந்திய பதில் தூதுவர் திரு வினோத் K ஜாக்கோப் அவர்களால் பாடசாலை நிர்வாகத்தினரிடம் கையளிக்கப்பட்டதுடன் குறித்த கட்டிடங்களின் நினைவுக்கல்வெட்டுக்கள் இந்திய பதில் தூதுவராலும் மாண்புமிகு வடமாகாண ஆளுனர் திருமதி பீ.எம்.எஸ். சாள்ஸ் அவர்களாலும் புனித ஹென்றியரசர் கல்லூரியில் நடந்த விழாவில் இணைந்து அப் பள்ளியின் கல்வெட்டு திரைநீக்கம் செய்யப்பட்டதுடன் ஏனைய பாடசாலைகளின் கல்வெட்டுக்கள் வீடியோ காணொளி மூலமாகவும் திரைநீக்கம் செய்யப்பட்டது. வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இளங்கோவன் நிகழ்வில் கலந்து கொண்ட அனைவரையும் வரவேற்றதுடன் நிகழ்வில் உரையாற்றிய வடமாகாண ஆளுனர் வடமாகாணத்தின் கல்வி வளர்ச்சிக்கு இந்திய அரசாங்கத்தினால் வழங்கப்படும் பங்களிப்புக்கு தமது நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டார். அதனைத் தொடர்ந்து மாண்புமிகு இலங்கைக்கான இந்திய பதில் தூதுவர் தனது உரையில் இந்திய அரசாங்கத்தின் நிதிப்பங்களிப்பில் வடமகாணத்தில் பூர்த்தி செய்யப்பட்ட மற்றும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற மக்கள் நலன் சார்ந்த அபிவிருத்தி திட்டங்களைப் பட்டியலிட்டதுடன் இத் திட்டங்கள் யாவும் பூர்த்தியடைந்ததும் வடமாகாணம் அபிவிருத்தியில் சிறந்த நிலையை அடையும் என்று நம்பிக்கை வெளியிட்டார்.

3. கல்வித்துறை அதிகாரிகள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் நலன்விரும்பிகள் நிகழ்வில் சமூகமளித்திருந்தனர்.

4. நிகழ்வில் எடுக்கப்பட்ட புகைப்படங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

***

*15 ஜனவரி 2020*

யாழ்ப்பாணம்